இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 65 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – புரட்டாசி 27 – சனிக்கிழமை 14 அக்டோபர் 2023 – சென்னை 16 +8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 65: Thiruvalluvar Year - 2054 - Purattasi 27 - Saturday 14 October 2023 - Chennai 16+8 Pages ₹ 5.00

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் – சென்னையில்

# இன்று மகளிர் உரிமை மாநாடு!

## சோனியா காந்தி - மெஹபூபா முஃப்தி - பிரியங்கா காந்தி - சுப்ரியா சுலே - முன்னணியினர் பங்கேற்பு - கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. முன்னிலை!

**சென்னை, அக். 14 -**

**சென்னையில் கழக மகளிர் அணியினர் முன்னின்று நடத்தும் தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு மகளிர் உரிமை மாநாடு கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் இன்று (14.10.2023) மாலை நடைபெறுகின்றது.**

இதில் அகில இந்திய காங்கிரஸ் கட்சி முன்னாள் தலைவர் திருமதி. சோனியா காந்தி பங்கேற்று மாநாட்டுப் பேருரையாற்றுகிறார்.

இதுபற்றிய விவரம் வருமாறு:-

பெண்களின் முன்னேற்றமே சமுதாய முன்னேற்றமென ஓயாது உழைத்தவர் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள், பெண்களுக்குச் சொத்துரிமை, அரசு வேலைகள் மற்றும் உள்ளாட்சித் தேர்தல்களில் இட ஒதுக்கீடு என மகளிர் உரிமைகளைப் பாதுகாக்கப் பாடுபட்டவர்.

அவரது நூற்றாண்டை முன்னிட்டு, தி.மு.கழக மகளிர் அணி ஒருங்கிணைப்பில், கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் மகளிர் உரிமை மாநாடு இன்று (14.10.2023 - சனிக்கிழமை) மாலை 4.30 மணி அளவில் நந்தனம்



ஒய்.எம்.சி.ஏ. திடலில் நடைபெறுகிறது.

இம்மாநாட்டிற்கு கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்று சிறப்புரையாற்றுகிறார்.

காங்கிரஸ் கட்சியின் அகில இந்திய முன்னாள் தலைவர் திருமதி. சோனியா காந்தி அவர்கள் மாநாட்டுப் பேருரையாற்றுகிறார்.

இதில் ஜம்மு காஷ்மீர் முன்னாள் முதலமைச்சரும், ஜம்மு - காஷ்மீர் மக்கள் ஜனநாயகக் கட்சித் தலைவருமான மெஹபூபா முஃப்தி,

காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் பிரியங்கா காந்தி, தேசியவாத காங்கிரஸ் கட்சி செயல் தலைவர் சுப்ரியா சுலே,

பீகார் மாநில உணவு அமைச்சரும், ஐக்கிய ஜனதா தள தேசிய நிர்வாகக் குழு உறுப்பினருமான லெஷி சிங், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொலிட் பீரோ உறுப்பினர் சுபாஷினி அலி,

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தேசிய நிர்வாகக் குழு உறுப்பினர் ஆனி ராஜா, ஆம் ஆத்மி கட்சி தேசிய நிர்வாகக் குழு உறுப்பினரும் டெல்லி சட்டப்பேரவை துணைத் தலைவருமான ராக்கி பிட்லன், திரிணாமுல் காங்கிரஸ் செய்தி தொடர்பாளர் சுஷ்மிதா தேவ், சமாஜ்வாதி கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டிம்பிள் யாதவ் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

தி.மு.கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. முன்னிலை வகித்து பேசுகிறார்.

தி.மு.கழக மகளிர் அணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சன் வரவேற்றுப் பேசுகிறார்.

தி.மு.கழக மகளிர் தொண்டர் அணிச் செயலாளர் நாமக்கல் ராணி நன்றி



கூறுகிறார்.

**முதல்வர் மு.க.ஸ்டாலின் மாநாட்டு ஏற்பாடுகளை பார்வையிட்டு ஆலோசனை!**

கழக மகளிரணி சார்பில் இன்று மாபெரும் மகளிர் உரிமை மாநாடு நந்தனம், ஒய்.எம்.சி.ஏ. திடலில் நடைபெறுகிறது. இதையொட்டி பிரமாண்டமான முறையில் பந்தல் போடப்பட்டு ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன.

கழகத் தலைவரும் முதலமைச்சரு



மான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று மாநாடு நடைபெறும் இடத்தைப் பார்வையிட்டு மேற்கொள்ளப்பட வேண்டிய ஏற்பாடுகள் குறித்து ஆலோசனைகள் வழங்கினார்.

அப்போது அமைச்சர்கள் கே.என். நேரு, தா.மோ. அன்பரசன், மா.சுப்பிரமணியன் மற்றும் கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

---

## திராவிட இயக்க எண்ணத்தால் உருவானவர்! பெரியார், அண்ணா, கலைஞர் ஆகியோரின் பேரன்பை பெற்றவர்! வருங்கால சமுதாயத்திலும்

# ஆற்றல் மிக்க ஆசைத் தம்பிகள் உருவாகவே இதுபோன்ற விழா!

## வாலிபப் பெரியார் ஏ.வி.பி.ஆசைத்தம்பி நூற்றாண்டு விழாவில் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் எழுச்சிமிகு உரை!

**சென்னை,அக்.14–**

**சென்னையில் நடைபெற்ற ‘வாலிபப் பெரியார்’ ஏ.வி.பி. ஆசைத் தம்பி அவர்களின் நூற்றாண்டு விழாவில் கழகத் தலைவர்–முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றுகையில் திராவிட இயக்க எண்ணத்தால் உருவானவர் என்றும், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தமிழினத் தலைவர் கலைஞர் ஆகியோரின் பேரன்பைப் பெற்றவர் என்றும் வருங்கால சமுதாயத்திலும் ஆற்றல் மிக்க ஆசைத் தம்பிகள் உருவாகவே இதுபோன்ற விழா பயன்படுகின்றன என்றும் குறிப்பிட்டார்.**

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (13.10.2023) சென்னை, இராஜா அண்ணாமலை மன்றத்தில் நடைபெற்ற கழகத்தின் மூத்த முன்னோடி வாலிபப் பெரியார் ஏ.வி.பி. ஆசைத்தம்பி அவர்களின் நூற்றாண்டு விழாவில் ஆற்றிய உரை வருமாறு:–

‘வாலிபப் பெரியார்’ என்று போற்றப்படும் ஏ.வி.பி.ஆசைத்தம்பி அவர்களின் நூற்றாண்டு விழாவை மிகக் குறுகிய காலத்தில் எழுச்சியுடனும், ஏற்றத்துடனும் இதை ஏற்பாடு செய்திருக்கக்கூடிய அமைச்சர் சேகர்பாபு அவர்களுக்கு முதலில் தலைமைக் கழகத்தின் சார்பில் என் நன்றியை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த நூற்றாண்டு விழாவை, ஒரு நிகழ்ச்சியாக மட்டும் நடத்தாமல், புகைப்படக் கண்காட்சியையும்,



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (13.10.2023) சென்னை, இராஜா அண்ணாமலை மன்றத்தில் நடைபெற்ற கழகத்தின் மூத்த முன்னோடி வாலிபப் பெரியார் ஏ.வி.பி. ஆசைத்தம்பி அவர்களின் நூற்றாண்டு விழாவில், அவரது திருவுருவப்படத்தை திறந்து வைத்து, சிறப்புரையாற்றினார். இவ்விழாவில், கழகப் பொதுச் செயலாளர் – நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், கழகப் பொருளாளர் டி.ஆர். பாலு எம்.பி, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா. மதிவேந்தன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, தயாநிதிமாறன் எம்.பி. உள்ளிட்ட நாடாளுமன்ற, சட்டமன்ற இந்நாள், முன்னாள் உறுப்பினர்கள், வாலிபப் பெரியார் ஆசைத்தம்பி அவர்களின் குடும்பத்தினர் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

அடுத்து ஆசைத்தம்பி அவர்களுடைய வாழ்க்கை வரலாறு குறித்து ஒரு சிறு ஆவணப்படத்தையும் தயாரித்து வழங்கக்கூடிய ஒரு பன்முக விழாவாக இதை நடத்திக் கொண்டிருக்கிறார்.

எதற்காக கழக முன்னோடிகளைப் போற்றும் இத்தகைய விழாக்களை நடத்துகிறோம்? என்றால், அண்ணன் துரைமுருகன் அவர்கள் எடுத்துச் சொன்னது போல, அவர்களது புகழைப் பரப்புவதற்காக மட்டுமா நடத்துகிறோம்? இல்லை... வரக்கூடிய காலக்கட்டத்தில் வருங்கால சமுதாயத்திலும் ஆற்றல்மிக்க ஆசைத்தம்பிகள் உருவாக வேண்டும் என்பதற்காகத் தான் இது போன்ற விழாக்களை நடத்துகிறோம்!

> ஒற்றை மொழி – ஒற்றை மத நாடாக மாற்றிவிடாதீர்கள்” என்று எச்சரிக்கை செய்தார். அவரது நாடாளுமன்ற உரைகளில் இன்னொன்றையும் வலியுறுத்தி இருக்கிறார். “தமிழ்நாடு இந்தளவுக்கு விழிப்புணர்வு பெற்றுள்ளது என்றால், அதற்குக் காரணம், பெரியார் இயக்கம்! எனவே, வெவ்வேறு மாநிலங்களில் இருந்து வந்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள், உங்கள் மாநிலங்களில் பெரியார் இயக்கத்தை உடனே தொடங்குங்கள்!” என்றும் ஆசைத் தம்பி அவர்கள் அங்கே பேசி இருக்கிறார்.

‘ஒருகாலம் வரும்... சட்டமன்ற உறுப்பினராக ஆவோம்; நாடாளுமன்ற உறுப்பினராக ஆவோம்...’ என்றெல்லாம் யாரும் கணக்குப் போடாத காலத்தில், திராவிட இயக்கத் தூணாக தன்னை ஒப்படைத்துக் கொண்டவர் நம்முடைய ஆசைத்தம்பி அவர்கள்.

நூற்றாண்டு நாயகர் தலைவர் கலைஞர் அவர்களின் சம காலத்தவரான அண்ணன் ஆசைத்தம்பி அவர்கள், தலைவர் கலைஞரைவிட ஐந்து மாதம் இளையவர்.

தொடர்ச்சி 3-ஆம் பக்கம்